**செய்தி வெளியீடு எண் : 1171** **நாள் : 08.08.2024**

# செய்தி வெளியீடு

## நிதி (வழிவகைகள்-II )த் துறை

தமிழ்நாடு அரசு மொத்தம் **ரூபாய் 1000 கோடி மதிப்புள்ள பங்குகள் வடிவிலான 10 ஆண்டுகால பிணையப் பத்திரங்கள்** ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவிருப்பதாக அறிவித்துள்ளது. இந்த ஏலம் இந்திய ரிசர்வ் வங்கியால், மும்பையில் உள்ள அதன் மும்பை கோட்டை அலுவலகத்தில் **ஆகஸ்ட் 13, 2024** அன்று நடத்தப்படும். போட்டி ஏலக்கேட்புகள் முற்பகல் 10.30 மணியிலிருந்து 11.30 மணிக்குள்ளாகவும், போட்டியற்ற ஏலக் கேட்புகள் முற்பகல் 10.30 மணியிலிருந்து 11.00 மணிக்குள்ளாகவும் இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் [Reserve Bank of India Core Banking Solution (E-Kuber) System] மின்னணு படிவத்தில் (Electronic format) **ஆகஸ்ட் 13, 2024** அன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

அரசு முதன்மை செயலாளர்,
நிதித்துறை, சென்னை

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu